# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 28.05.2019 | | **2019ம் ஆண்டு மே மாதம் 28–ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 05.00 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**<br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 28.05.2019 | 326 | **<u>பொருள் எண். 1</u>**<br><br>**2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்**<br>சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)-ல் பிரிவு 3,6 மற்றும் 25 களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ல் படி 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், சில்லறை விற்பனை, நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.<br>1 (i) **செயலாக்க அதிகாரி**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.<br>(ii) **கண்காணிப்பு அதிகாரி**: கண்காணிப்பு அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் நியமிக்கப்படும் அரசு பணியாளர்களாவர்.<br>(iii) **மேல்முறையீடு அலுவலர்**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.<br>(iv) **தண்டனைகள் விதிக்கும் வழிமுறைகள்**: ஷை சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) போன்ற தண்டனைக்குள்ளாவார்கள்.<br>(v) வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :<br><br>1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்<br><br>a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
e) 2000-ம் அதற்கு மேல்.

2. வணிக வளாகங்கள்:
   a) பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்
   b) பல்பொருள் அங்காடிகள் பெரியது.
   c) திரையரங்குகள்
   d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் மனமகிழ்மன்றம் போன்றவைகள
   e) கல்வி நிறுவன வளாகங்கள்
   f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள்
   g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள்
   h) பெரிய நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள், இயந்திரங்கள் உதிரிபாகங்கள் விற்பனையகம்.

3 மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள் மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள்.

4 சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்

II தண்டனைகள் விபரம்

**பிரிவு 306 (28-A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றுமு பகிர்ந்தளித்தல் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் | ஐம்பதாயிரம் ரூபாய் | ஒரு லட்சம் ரூபாய் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | பத்தாயிரம் ரூபாய் | பதினைந்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஒரு நூறு ரூபாய் | இருநூறு ரூபாய் | ஐநூறு ரூபாய் |

உபவிதிகள் அரசிதழில் வெளியிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.50,000/– செலவினம் மேற்கொள்ளவும் மன்றப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். /2019/எச்1.**

<table>
<tr>
<td>28.05.2019</td>
<td>326</td>
<td>
<u>பொருள் எண். 2</u><br>
துவாக்குடி நகராட்சி 2004ம் ஆண்டு முதல் பேரூராட்சியாக இருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக இருந்து வருகிறது. இந்நகராட்சி 14.37 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. இதில் 21 வார்டுகள் உள்ளன. 21 வார்டுகளில் 15 வார்டுகள் துப்புரவு பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்நகராட்சியின் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 38875 ஆகும். தற்சமயம் நடப்பாண்டு மக்கள் தொகை 41375 ஆகும். மேலும், நடப்பு மக்கள் தொகையின்படி பொது சுகாதார வசதி செய்யப்பட வேண்டும். இந்நகராட்சியில் 56.62 கிலோ மீட்டர் சாலை உள்ளது. இதில் 71 பிரதான தெருக்கள் ஆகும்.இதில் 10894 குடியிருப்புகள் உள்ளன.இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் 23 நபர்கள் ஆகும். இதில் தற்சமயம் 22 நபர்கள் பணிபுரிந்து வருகின்றன. மேலும், எதிர்வரும் 30.06.2019ல் இரு பணியாளர்கள் ஓய்வு பெற உள்ளனர். இந்நகராட்சிக்கு அரசாணை எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் 30.04.1997ன்படி 105 பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். தற்சமயம் நாள் ஒன்றுக்கு 11.50 அளவு திடக்கழிவுகள் சேகரம் செய்யப்பட்டு நுண்ணுயிர் உரக்கிடங்கில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>
கீழ்க்கண்ட விபரப்படி துப்புரவு பணியாளர்கள் தேவை கணக்கீடு செய்யப்படுகிறது:—<br>
<u>அரசாணை எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப3) நாள் 30.04.1997ன்படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் விபரம்</u>
<table>
<tr><td>1</td><td>250 குடியிருப்புகளுக்கு 3 துப்புரவு பணியாளர்கள் வீதம் 10894 குடியிப்புகளுக்கு தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள்</td><td>131 நபர்கள்</td></tr>
<tr><td>2</td><td>டிப்பர் லாரி (சிறியது)</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>3</td><td>உரக்கிடங்கில் உரம் தயாரித்தல்</td><td>1 நபர்</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>135 நபர்கள்</td></tr>
</table>
BHEL, தேசிய தொழில்நுட்பக் கழகம், பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் பகுதியில் உள்ள 2496 குடியிருப்புகள் நீங்கலாக 250 குடியிருப்புகளுக்கு 3 நபர்கள் வீதம் 2496 குடியிருப்புகளுக்கு தேவைப்படும் 30 நபர்கள் நீங்கலாக, அரசாணையில் கண்டுள்ளபடி 105 பணியாளர்கள் தேவையாக உள்ளது. இதில் நான்கு துப்புரவு மேற்பார்வையாளர்களும் அடங்கும். எனவே, 21 துப்புரவு பணியாளர்களை தவிர மீதமுள்ள 83 நபர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் தனியார் மூலம் பணி நியமனம்
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு கீழ்கண்டவாறு ஊதியம் வழங்கப்பட வேண்டும்<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஊதிய விவரம்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1</td><td>துப்புரவு பணியாளர் 83 X 360X 30</td><td>896400/-</td></tr>
<tr><td>2</td><td>துப்புரவு பணி மேற்பார்வையாளர் 4 X 360X 30</td><td>43200/-</td></tr>
<tr><td></td><td>மொத்தம் மாதம் ஒன்றுக்கு</td><td>939600/-</td></tr>
</table>
எனவே, ஆண்டு ஒன்றுக்கு ( 939600X 12= 11275200). எனவே, 83 பணியாளர்கள் மற்றும் 4 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் உட்பட திருச்சிராப்பள்ளி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி வழங்கும் உத்தேச செலவினம் ரூ.11275200/- ஆகும். தனியார் மூலம் துப்புரவு பணியாளர்களை பணி நியமனம் செய்வதற்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கு தஞ்சாவூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் வழியாக சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u> :– மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண். 13/2012/எச்1.</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.05.2019</td>
<td>327</td>
<td><u>பொருள் எண். 3</u><br>
திருவெறும்பூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் 2018–19 ம் ஆண்டிற்கு துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதிகளில் 2 குடிநீர் பணிகள் மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். செ.மு.ஆ.எண். 1718/2018/அ3 நாள். 16.08.2018 – ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து 2 குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை 06.09.2018–ம் தேதி நமது அம்மா நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்தின் பில் பட்டியல் ரூ. 15,120/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u> :– மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண். 946/2018/இ1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 28.05.2019 | 328 | <u>பொருள் எண். 4</u><br><br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு லாரி எண். TN 45 BY 4097 –க்கு பவர் ஸ்டேரிங் பம்பு பழுதடைந்ததை மாற்றி அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் TV சுந்தரம் அய்யங்கார் அன்டு சன்ஸ் நிறுவனத்தில் புதியதாக வாங்கி பொருத்தியமைக்கு மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை ரூ. 7444/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :–** பணியின் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான TV சுந்தரம் அய்யங்கார் அன்டு சன்ஸ் நிறுவனத்தில் பணி மேற்கொண்டமைக்கும் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 329/2017/எச்1** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 28.05.2019 | 329 | <u>பொருள் எண். 5</u><br><br>இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு தேவையான கீழ்கண்ட விவரப்படியான விற்பனை ரசீதுகள் அச்சிட்டு வழங்கியமைக்கு தொகை வழங்க கோரி தமிழ்நாடு கூட்டுறவு அச்சகம் திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்திலிருந்து பில்பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>1. இட்லி டோக்கன் 100000 எண்ணிக்கை ( 426701 முதல் 526700 வரை) – ரூ. 10384/–<br>2. இட்லி டோக்கன் 100000 எண்ணிக்கை ( 526701 முதல் 626700 வரை) – ரூ. 8800/–<br>3. தயிர்சாதம் டோக்கன் 50000 எண்ணிக்கை ( 320641 முதல் 370640 வரை) – ரூ. 4400/–4. சாம்பார்சாதம் டோக்கன் 50000 எண்ணிக்கை ( 336281 முதல் 386280 வரை) – ரூ. 4400/–5. மத்திய மற்றும் மாநில சரக்கு மற்றும் சேவை வரி 18 (9+9) சதவீதம் <u>– ரூ. 3168/–</u><br>மொத்தம் – ரூ. 31152/–<br><br>எனவே மேற்படியான தொகை ரூ. 31152/–யை தமிழ்நாடு கூட்டுறவு அச்சகம், திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :–** மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**ந.க.எண். 316/2016/அ1** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 28.05.2019 | 330 | <u>**பொருள் எண். 6**</u><br><br>துவாக்குடி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு கிரிமி நாசினி பொருட்கள் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி பெற்று ஸ்ரீசெந்தூர் டிரேடர்ஸ் குளித்தலை நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதன் பேரில் கிரிமி நாசினிகள் விநியோகம் செய்துள்ளனர், அதற்குரிய தொகை ரூ. 65300/– மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :– 2019** பாராளுமன்ற தேர்தல் நடைமுறைகள் அமுலில் இருப்பதால் **1920** நகராட்சிகள் சட்டம் பிரிவு **15–**ன் கீழ் வழங்கலாம்.<br>**ந.க.எண். 489/2019/எச்1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 28.05.2019 | 331 | <u>**பொருள் எண். 7**</u><br><br>துவாக்குடி நகராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளுதல் மற்றும் ஒப்பந்த பணியாளர்களை கொண்டு வால்வுகள் இயக்கவும் உண்டான செலவினம் ரூ. **9.00** லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :– 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 495/2019/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 28.05.2019 | 332 | <u>**பொருள் எண். 8**</u><br>துவாக்குடி நகராட்சி **5–**வது வார்டு பெல்நகர் பகுதியில் உள்ள **26** தெருக்களுக்கு பெயர் பலகை அமைத்து தர கோரி வரப்பெற்ற பெல்நகர் வெல்பேர் அசோசியேஷன் கடிதத்தின் படி தெரு பெயர் பலகைகள் அமைக்கவும் மேலும் நகராட்சி பகுதியில் விடுப்பட்டுள்ள தெருக்களுக்கு பெயர் பலகைகள் அமைக்க ரூ. **9.00** லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :– 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 536/2019/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 28.05.2019 | 333 | **<u>பொருள் எண். 9</u>**<br><br>துவாக்குடி நகராட்சி 5—வது வார்டு பெல்நகர் நுழைவு பகுதியில் உள்ள சிறுபாலத்தினை கடந்து பள்ளி வாகனங்கள், தொழிற்சாலை வாகனங்கள், வணிக வாகனங்கள் மற்றும் குடியிருப்பு வாசிகளின் வாகனங்கள் சென்று வரும் நிலையில் மேற்படி சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் உடன் மேற்கண்ட சிறுபாலத்தினை மாரமத்து செய்து தரக்கோரி வரப்பெற்ற பெல்நகர் வெல்பேர் அசோசியேஷன் கடிதத்தின் படி ரூ. 9.90 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :— 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 536/2019/இ1** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 28.05.2019 | 334 | **<u>பொருள் எண். 10</u>**<br><br>துவாக்குடி நகராட்சி 5—வது வார்டு ராவுத்தாண்மேடு பகுதியில் உள்ள நகராட்சி சமுதாயக்கூடத்தின் பாதுகாப்பு கருதி வடக்கு பகுதியில் பாதுகாப்பு சுற்றுச்சுவர் அமைக்கவும் மேலும் சமுதாயக்கூடம் பின்புறம் மழைநீர் வடிகாலுடன் சிறுபாலம் அமைக்கவும் கீழ்கண்ட விவரப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>(see table below)<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u> :— 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 504/2019/இ1** | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 5—வது வார்டு ராவுத்தாண்மேடு சமுதாயக்கூடத்தின் வடக்கு பகுதியில் பாதுகாப்பு சுற்றுச்சுவர் அமைத்தல் | 9.80 |
| 2. | 5—வது வார்டு ராவுத்தாண்மேடு சமுதாயக்கூடத்தின் பின்புறம் மழைநீர் வடிகாலுடன் சிறுபாலம் அமைத்தல் | 9.90 |

<table>
<tr>
<td>28.05.2019</td>
<td>335</td>
<td><u>பொருள் எண். 11</u><br><br>துவாக்குடி நகராட்சி 7, 8, 9, 11 மற்றும் 15–வது வார்டு பகுதிகிளில் உள்ள சிறுபாலங்கள் பழுதடைந்துள்ளதால் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதால் மேற்கண்ட சிறுபாலங்களை மராமத்து செய்ய ரூ. 6.25 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u> :– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 533/2019/இ1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>28.05.2019</td>
<td>336</td>
<td><u>பொருள் எண். 12</u><br>துவாக்குடி நகராட்சி பகுதியில் கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் தன்னிறைவு திட்டத்தின் மூலம் கட்டுப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வரும் கீழ்கண்ட விவரப்படியான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் உள்ள அளவுமானிகள் பழுதடைந்துள்ளதை சரி செய்தல் மற்றும் புதிய மீட்டர் பொருத்தல் போன்ற பணிகளுடன் 2019–20 ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளவும் கீழ்கண்ட விவரப்படி ரூ. 20.90 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (லட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண். 3 துவாக்குடி பழைய நகராட்சி அலுவலகத்தின் அருகில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு அளவு மானி பொருத்தி வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளுதல்</td><td>7.00</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண். 5 பெல்நகர் மற்றும் வார்டு எண். 15 முத்துராமலிங்க தேவர் சாலையில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு அளவு மானி பொருத்தி வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளுதல்</td><td>9.90</td></tr>
<tr><td>3.</td><td>வார்டு எண். 12 பெரியார் திடல் பகுதியில் அமைந்துள்ள இரண்டடுக்கு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு அளவு மானி பொருத்தி வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளுதல்</td><td>4.00</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u> :– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 608/2019/இ1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>08.03.2019</td>
<td>337</td>
<td><u>பொருள் எண். 13</u><br>
துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோக குழாய் மற்றும் சிறு மின்விசை பம்புகள் மற்றும் அடிப்பம்புகள் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ. எண்</td><td>வேலையின் பெயர்</td><td>மதிப்பீடு (லட்சத்தில்)</td></tr>
<tr><td>1.</td><td>1 முதல் 6–வது வார்டு வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய், சிறு மின்விசை பம்புகள் மற்றும் அடிப்பம்புகள் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல்</td><td>6.00</td></tr>
<tr><td>2.</td><td>7 முதல் 15–வது வார்டு வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய், சிறு மின்விசை பம்புகள் மற்றும் அடிப்பம்புகள் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல்</td><td>6.00</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u> :– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி உடன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 475/2019/இ1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

_____________ X _____________